DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
UDUMALPET

SESSIONS CASE No: 126/2016

Deposition of Witness for : P.W. 11

| | | | |
|---|---|---|---|
| Name | : வீரக்குமார் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 24.02.2023

**All 3 Accused present.**

**சாட்சி பட்டியல் படி LW13 ஆக காட்டப்பட்டு அசா 11 ஆக விசாரிக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை –**

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்சமயம் குறிச்சிகோட்டையில் குடியிருந்து பிட்டர் வேலை செய்கிறேன். 7.2.2015 அன்று காலை 7 மணிக்கு கணியூருக்கு கிழக்கில் ஜேசிபி வேலை செய்யலாம் என்று கேட்க போனேன். போகும்போது துங்காவி நால் ரோடு அருகில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டு இருந்தார்கள். அப்போது நானும் உதயகுமாரும் இருசக்கர வாகனத்தில் போனபோது போலீசார் எங்களை நிறுத்தினார்கள். பின்னால் வந்த ஒரு இருசக்கர வாகனத்தை போலீசார் நிறுத்தியும் நிற்காமல் போய் சற்று தள்ளி போய் தடுமாறி கீழே விழுந்து விட்டார். வண்டி சிடீ 100 ஆகும். அதன் பதிவெண் டிஎன்41பி 6145 ஆகும். வண்டியை பார்த்தால் அடையாளம் சொல்லுவேன். (வாகனம் மேற்படி போலீசார் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கபட்டு இருப்பதால் வாகனத்தின் புகைப்படம் எதுவும் இணைக்கப்படவில்லை என்பதால் விசாரணை இத்துடன் நிறுத்தி

வைக்கப்பட்டு வாகனம் கொண்டு வர விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.) (1ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் இன்றைய தினம் ஆஜராகவில்லை என்று தெரிவித்துள்ளார். மேலும் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுவதால் 17.3.2013 அன்று வழக்கறிஞர் பொறுத்து 1ம் எதிரி முடிவு செய்து அழைத்து வர அறிவுறுத்தப்பட்டது. இதன் பொருட்டு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படமாட்டாது என்று 1ம் எதிரிக்கு எடுத்துரைக்கப்பட்டது)

ஒப்பம் நாகராஜன்
கூடுதல் மாவட்ட நீதிபதி
உடுமலைபேட்டை (பொறுப்பு)